DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: சி.மகேந்திரன் | Father's Name: சின்னப்பிள்ளை |
| Village: வாணியம்பாடி | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 54 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 27.02.2024

**O.S.No.100/2003** **P.W.1**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பத்திர எழுத்தராக உள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் முழுமையாக படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் சொல்லப்பட்டுள்ள பள்ளியானது எங்கு இருந்தது என்றால் வாணிம்பாடி சென்னாம்பேட்டையில் இருந்தது. எனது வழக்குரையில் முதல் பரிகாரத்தில் என்னை எம் ஜே எம்–ன் செக்ரட்ரி என விளம்புகை செய்ய கோரப்பட்டுள்ளது தொடர்பாக, அந்த பரிகாரத்தில் எம் ஜே எம் டிரஸ்ட் என குறிப்பிடப்படவில்லை என எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் எதிர்வழக்குரையில் தெரிவித்திருப்பது தவறாகும்.

2. எனது வழக்குரையில் முதலாவது பரிகாரத்தில் டிரஸ்ட் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. என் முன்பு காட்டப்படும் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில் பத்தி 9ல் எம் ஜே எம் என்று மட்டும் குறிப்பிடப்பட்டு, டிரஸ்ட் என்ற வார்த்தை சேர்க்கப்படவில்லை என

சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம், சொல்லப்பட்டுள்ளது. வழக்குரையில் மேற்கண்டவாறு டிரஸ்ட் என்ற வார்த்தை சேர்க்கப்படாமல் இருப்பது குறித்து எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள போதிலும் அதனை பொறுத்து திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காமலும் அதனை பொறுத்து எனது முதல் விசாரணையில் விளக்கம் சொல்லாமல் இருப்பதற்கும் என்ன காரணம் என்றால் அது அவசியமில்லை.

3. இந்த அசல் வழக்கானது ஒரு டிரஸ்ட்–ன் நிர்வாகம் சார்ந்த வழக்கு என்றால் சரிதான். டிரஸ்ட்–ன் நிர்வாகம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் டிரஸ்டின் மற்ற டிரஸ்டிக்களை தரப்பினர்களாக சேர்க்காததற்கு என்ன காரணம் என்றால் பிரதிவாதி மட்டும் தான் தவறு செய்தார், அதனால் அவருக்கு எதிராக மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, மற்றவர்கள் சுமுகமாகத்தான் இருந்து வருகிறார்கள். டிரஸ்ட்–ன் நிர்வாகம் சார்ந்த தாக்கல் செய்யும் வழக்கில் அந்த டிரஸ்டையோ அல்லது அதன் டிரஸ்டிக்களையோ தரப்பினர்களாக சேர்க்காமல் விடுவிப்பது தவறு என்பது எனக்கு தெரியுமா என்றால் அது தவறல்ல.

4. வழக்கு டிரஸ்ட் சார்ந்த பள்ளி 1953ம் ஆண்டு ஜேம்ஸ் செல்வதாஸ் என்பவரால் தொடங்கப்பட்டது என்றால் 1953ம் ஆண்டு தொடங்கப்பட்டது, தொடங்கியவர் பெயர் எனக்கு நினைவில்லை. பிரதிவாதியின் தந்தை பெயர் ஜேம்ஸ் செல்வதாஸ் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1954 ஆம் ஆண்டில் திரு.வி.க. பள்ளிக்கு அரசு மாணியம் வழகங்குவதற்கு ஜேம்ஸ் செல்வதாஸ் அங்கிகாரம் பெற்றார் என்பது எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திரு.வி.க.பள்ளி சிறுபாண்மை பிரிவிற்கான ஒதுக்கீடு சிறப்பு சலுகை அடிப்படையில் இயங்கிவருகிறது என்றால் அது சரியல்ல.

5. திரு.வி.க பள்ளி மற்றும் அறக்கட்டளை தொடர்பாக ஜேம்ஸ் செல்வதாஸ் 19.09.1984 அன்று ஒரு உயில் ஆவணம் ஏற்படுத்தி அதனை பதிவு செய்து வைத்துள்ளதாக எதிர்வழக்குரையில் பத்தி 12 ல் சொல்லப்பட்டுள்ளது குறித்து நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, அது போன்று உயில் எதுவும் பதிவாகவில்லை. ஜேம்ஸ் செல்வதாஸ் 04.01.1987 அன்று இறந்துவிட்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் இறந்துவிட்டது தெரியும், இறந்த தேதி தெரியாது. ஜேம்ஸ் செல்வதாஸ் இறக்கும் வரை வழக்கு பள்ளி மற்றும் அறக்கட்டளை நிர்வாகமானது ஜேம்ஸ் செல்வதாஸின் கட்டுப்பாட்டில் தான் இருந்து வந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

6. வழக்கு அறக்கட்டளை மற்றும் பள்ளி நிர்வாகம் குறித்து எனக்கு எந்த ஆண்டு முதல் ஞாபகம் உள்ளது என்றால் எனக்கு 2001 ஆண்டிற்கு பின்னிட்ட நிகழ்வுகள் தான் சரியாக ஞாபகம் உள்ளது, அதற்கு முந்தைய நிகழ்வுகள் துள்ளியமாக சொல்லயியலாது. ஜேம்ஸ் செல்வதாஸ் இறப்பிற்கு பிறகு 1987 முதல் 1989 வரை வழக்கு பள்ளி நிர்வாகமானது மாவட்ட கல்வி அலுவலரின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1989 க்கு பின்னிட்டு ஜேம்ஸ் செல்வதாஸின் சட்டப்படியான வாரிசான அவரது மகன் பிரதிவாதி ஜேம்ஸ் செல்வதாஸின் மனைவி பெயரை உள்ளடக்கி மேரி ஜேம்ஸ் மெமோரியல் டிரஸ்ட் என்பதை எம் ஜே எம் டிரஸ்ட் என ஆரம்பித்து பள்ளியை நிர்வகித்து வரப்பட்டது என்றால் சரிதான்.

7. அவ்வாறு அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்ட பிறகு 24.07.1989 அன்று அறக்கட்டளை நிர்வாகிகள் பொறுப்பேற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான், ஆனால் எனக்கு தேதி சரியாக ஞாபகம் இல்லை. அவ்வாறு நிர்வாகிகள் பொறுப்பேற்றபோது பிரதிவாதியின் சகோதரர் ஹெர்பர்ட் குணராஜ் என்பவர்

செயலாளராகவும் தாளாலராகவும் செயல்பட்டு வந்தார் என்றால் அது உண்மையல்ல. நிர்வாகிகள் பொறுப்பேற்ற போது மேற்படி டிரஸ்டின் செயலாளராகவும் தாளாலராகவும் யார் பொறுப்பேற்றார் என்றால் டிரஸ்டிற்கு செயலாளராக பிரதிவாதி நல்லப்பா பொறுப்பேற்றார், பள்ளியின் தாளாலராக யார் இருந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

8. வழக்கு டிரஸ்ட் மற்றும் பள்ளி நிர்வாகம் தொடர்பாக ஏற்கனவே அசல் வழக்கு எண்.317/1995 என்ற வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2001ம் ஆண்டிற்கு முந்தைய நிகழ்வுகள் குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் முடிவின்படி ஹெர்பர்ட் குணராஜ் பள்ளியின் தாளாலர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதன் பிறகு சம்பள பட்டுவாடா குறித்த பணிகள் நேரடியாக அரசாங்க மூலமாக இல்லாமல் அறக்கட்டளை மூலம் வழங்கப்படுவதற்கான நடைமுறை ஏற்படுத்தப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

9. பிரதிவாதி, ஐஇஎல்சி பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிப்புரிந்து வந்த சுதாகர் குணசேகரன் என்பவரை பள்ளித்துறை அனுமதி மூலம் செயலாளர் மற்றும் தாளாலராக நியமனம் செய்யப்பட்டார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் பின்னிட்டு சுதாகர் குணசேகரன் 2002ம் ஆண்டில் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டு மீண்டும் பள்ளி நிர்வாகம் பள்ளிக்கல்வித் துறை கட்டுப்பாட்டிற்கு சென்றது என்றால் சரிதான். அதன் பிறகு 05.04.2002ம் தேதியில் எம் மனோகர் என்பவர் கல்விக்குழு தலைவராக நியமிக்கப்பட்டு நிர்வாகனம் செய்து வந்தார் என்றால் அது உண்மையல்ல.

10. பின்னர் முன்னாள் தலைமை ஆசிரியர் சந்திரசேகரன் பெயரை சேர்த்து நான் பொய்யான ஆவணங்களை உருவாக்கி பிரச்சனை செய்யப்பட்டது என்றால் அது உண்மையல்ல. பிரதிவாதியின் தந்தை ஏற்படுத்திய உயில் ஆவணத்தில் மேற்படி சந்திரசேகரன் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறார் என்றாலும், அதனால் தான் நான் அந்த உயில் ஆவணத்தை எனக்கு தெரியாது என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சண்முகம், நான் மற்றும் எனது தந்தை சின்னப்பிள்ளை மற்றும் விஜயன் ஆகியோர்கள் தொடர்ந்து பள்ளி நிர்வாகத்தில் சட்டத்திற்குபுறம்பாக தலையிட்டு பொய்யான மனுக்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளதை வழக்காமாக வைத்திருந்தோம் என்றால் அவை உண்மையல்ல.

11. 15.03.2002 அன்று உதவி தொடக்க கல்வி மூலம் மாவட்ட கல்வி அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட கடிதத்திற்கு பிரதிவாதி தரப்பில் பதில் அளிக்கப்பட்டு எதிர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றால் அதுபோல இல்லை. நாங்கள் 27.03.2002 அன்று மேற்படி அறக்கட்டளை பதிவு ஆவணத்தின் இணைப்பு ஆவணமாக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம் என்றால் இன்று வரை அதுப்போன்று ஆவணம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. நான் தரப்பினராக இருந்து பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.214/2002 என்ற ஆவணம் என்ன காரணத்திற்காக பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபோன்று என் பெயரில் மேற்படி எண்ணில் எந்த ஆவணமும் பதிவாகவில்லை.

12. மேற்படி வழக்கு டிரஸ்ட் தொடர்பாக நாங்கள் இணைப்பு ஆவணம் பதிவு செய்திருக்கிறோமா என்றால் பதிவு செய்து இருக்கிறோம். அந்த ஆவணத்தின் தேதி மற்றும் ஆவண பதிவு எண் என்னவென்றால் 2001ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது, தேதி மற்றும் ஆவண பதிவு எண் எனக்கு

நினைவில்லை. அந்த ஆவணத்தில் யாரெல்லாம் தரப்பினர்கள் என்றால் வழக்கறிஞர் பாண்டுரங்கன், வழக்கறிஞர் ரவி ஆகியோர் ஆவர். மேற்படி ஆவணத்தில் பிரதிவாதி தரப்பினரா என்றால் இல்லை. மேற்படி அறக்கட்டளைக்கான இணைப்பு ஆவணத்தில் யாரெல்லாம் சாட்சிகள் என்றால் சந்திரசேகரன் மற்றும் சண்முகம் மற்றும் சிலர்.

13. அந்த இணைப்பு ஆவணத்தை தயாரித்து மற்றும் தட்டச்சு செய்தது யார் என்றால் ஆவண எழுத்தர் தான் செய்தார், அவரது பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த அறக்கட்டளை மூல ஆவணம் மற்றும் அதன் இணைப்பு ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்றால் இணைப்பு ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது, மூல ஆவணம் தலைவராக இருந்த பாண்டுரங்கன் வசம் இருக்கலாம். என்னிடம் இருப்பதாக சொல்லும் மேற்படி அறக்கட்டளை இணைப்பு பதிவு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் அது மாவட்ட கல்வி அலுவலரிடம் இருந்தது.

**குறுக்கு விசாரணை தொடரச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**